www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

41

# தமிழரசுக் கட்சியின் வெளிவேசம்

சங்கானையில் நடந்த சாதி ஒழிப்புப் போராட்டம் குடாநாடு முழுவதிலுமிருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய உத்வேகத்தைக் கொடுத்தது. நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, S.T.N. நாகரத்தினம் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. இவ்வியக்கம் குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மூன்று இலக்குகளைக் குறி வைத்து தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தியது.

> தமிழர்களை தமிழர்களே அடக்கும் இழிவு செய்யும், இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தும் சாதி அமைப்பையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டத்திற்கு, தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுடைய 'எதிர்கால நலனின் அக்கறையுள்ள கட்சியாக இருந்திருந்தால்' நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்க வேண்டும்.

அவையாவன,

1. **தேநீர்க்கடைகள்.**
2. **இந்து ஆலயங்கள்.**
3. **தண்ணீர்க் கிணறுகள்.**

அந்தக் கால கட்டத்தில் (1960—70) குடாநாட்டிலிருந்த சகல தேநீர்க் கடைகளிலும், சாப்பாட்டு கடைகளிலும் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றைய உயர் சாதியினருக்குச் சமமாக இருந்து தேநீர் அருந்துவதற்கும், உணவருந்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் உணவருந்துவதற்கென்று பெரிய சாப்பாட்டுக் கடைகளில் ஒரு ஓரத்தில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே இருக்கைகளும் மேசைகளும் கிடையாது: அவர்கள் தரையில் இருந்தே உணவு உண்ண வேண்டும். துருப்பிடித்த மூக்குப்பேணி, அல்லது சோடாப் போத்தல்களில்தான் அவர்கள் தண்ணீர் அல்லது தேநீர் குடிக்க வேண்டும். சாதி குறைந்த ஒருவர் தன்னுடைய சொந்த ஊரை விட்டு வெளியே செல்லும் போது தன்னுடைய சாதிப் பெயரையும் மறைத்து, உயர் சாதியினருக்குச் சமமாக அவர்களுக்குரிய இடத்திலிருந்து உணவருந்துவது கண்டு பிடிக்கப்பட்டால் அவருக்கு கடும் தண்டனை வழங்கப்படும். 1966—ம் ஆண்டில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட இளைஞர், ஒருவர் யாழ்ப்பாண நகரத்தில் உள்ள பிரபல சைவ உணவு விடுதி ஒன்றில் உயர் சாதிக்காரருக்குரியவர்களுக்குரிய இடத்தில் இருந்து உணவருந்தியபோது அவரது கைகளில் இருந்த 'காய்ப்பு' அடையாளத்தை வைத்து, அவர் மரமேறுபவர் என்று கண்டு பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டதுடன், மூன்று நாட்கள் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டு ஒரு 'லோட்டு' விறகை கொத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவம் நடந்தது.

எனவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தங்களுடைய முதல் இலக்காக இந்த தேநீர்க்கடை மற்றும் சாப்பாட்டுக் கடைகளை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு எதிரான போராட்டத்தை தொடுத்தனர்.

> தன்னுடைய உரிமையைத் தட்டிக் கேட்கச் சென்றவனை பிடித்து வந்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்து 'சிறுநீர் பருக்கிய' உதவிப் பொலீஸ் அதிகாரியின் நடத்தை, காவல் துறை எவ்வாறு சாதியக் கனவான்களின் பக்கம் நின்று செயற்பட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தப் போராட்டத்தில் முக்கியமாக தமிழரசுக் கட்சியினரின் பாத்திரமும், அதன் தலைவர்களது வர்க்கக் குணாம்சமும் திட்டமிட்டு மூடி மறைக்கப்பட்டு வந்திருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாபெரும் சாதி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்தில் 'அங்கம்' வகித்தது.

தமிழர்களை தமிழர்களே அடக்கும் இழிவு செய்யும், இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தும் சாதி அமைப்பையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டத்திற்கு, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுடைய 'எதிர்கால நலனின் அக்கறையுள்ள கட்சியாக இருந்திருந்தால்' நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி அவ்வாறு செய்யவில்லை. அது வெளியில் தீண்டாமைக்கும் சாதி அமைப்புக்கும் எதிரான கட்சியாக தன்னைக் காட்டிக் கொண்டு, உள்ளூர் சாதி அமைப்பை காப்பாற்றுபவர்களின் நலன்களுக்கு வக்காலத்து வாங்கும் கட்சியாக இருந்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பலரும் 'சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின்' வாக்குகளைப் பெறுவதற்காக வெளியிடத்தில் அந்த மக்களிடம் அன்பொழுகப் பேசினார்கள். தங்கள் வீட்டுக்குள் அவர்கள் வந்த போது உதவியாளர்களிடம் சொல்லி அவர்களை கேற்றுக்கு வெளியிலேயே நிற்க வைத்து 'ஐயா வீட்டில் இல்லை' என்று பொய் சொல்லி அனுப்பி வைக்கும் வேடதாரிகளாகவே இருந்தார்கள்.

சங்கானைப் போராட்டம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் தளபதி என்று மார்தட்டிக்கொண்டே அ.அமிர்தலிங்கம் தெரிவித்த கருத்துக்களும் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சும் அவரது சாதிய வர்க்க நலனை மட்டுமல்ல, அவர் சார்ந்த கட்சியினது சாதிய வர்க்க நலனையும் பிரதி பலிப்பதாக இருந்தது.

சண்முகதாசனும், அவரது சகாக்களும் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்ற பெயரில் ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்துவிட்டு, தமிழர்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்க முயல்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்திற்கு முறைப்பாடு செய்திருந்தார்கள்.

உண்மையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், காந்தி வழி; அகிம்சைவழி என்று சொல்லிக்கொண்டு 'ஐயாமார்களே நீங்கள் எங்களுக்கு அடியுங்கள், உதையுங்கள், எங்கள் வீடுகளை நெருப்பு வைத்துக் கொளுத்துங்கள், எங்கள் பெண்களை மானபங்கப் படுத்துங்கள். ஏனென்றால் பிறப்பால் நீங்கள் உயர்ந்தவர்கள்; நாங்கள் தாழ்ந்தவர்கள். நீங்கள் எது செய்தாலும் நாங்கள் எதிர்த்து ஒன்றும் செய்யக் கூடாது. ஆனால் தயவு செய்து எங்களுக்கு போத்தலிலும், கறள் பிடித்த மூக்குப் பேணியிலும் தேநீர் தராதீர்கள். எங்களை கோவிலுக்கு வெளியே நிற்கவிடாதீர்கள்', என்றெல்லாம் கெஞ்சி இரந்து நிற்கவில்லை.

அத்துடன் பிறப்பினால் யாரும் உயர்ந்தவரும் இல்லை. தாழ்ந்தவரும் இல்லை. உங்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் வேண்டும். நீங்கள் அதை தர மறுத்தால் நாங்கள் அதை எடுக்க வேண்டிய விதத்தில் எடுத்துக் கொள்வோம் என்று சவால் விட்டதுடன், சாதி அமைப்பை தகர்த்தெறிவதற்கான ஆயுதப் போருக்கும் அது தயாராகி வந்தது.

எப்போதுமே அடக்கு முறையாளர்களான சாதியக் கனவான்கள், ஆயுதபாணிகளாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களைச் சுற்றி ஆயுதம் தரித்த காடையர்கள் கூட்டம் ஒன்றையும் உருவாக்கியே வைத்திருந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் சாதிக்கட்டுப்பாடுகளை மீறுகின்ற போது சாராயத்தையும், பணத்தையும் கொடுத்து இந்தக் காடையர் கூட்டத்தை அனுப்பி அந்த மக்களுக்கு 'பாடம் படிப்பித்த வரலாறுகள்' நிறையவே உண்டு.

அது மட்டுமல்லாது அன்று குடாநாட்டில் இருந்த அரச காவல்துறை என்பது சாதியக் கனவான்களுக்கு சேவகம் செய்த காவல் துறையாகவே இருந்தது. சங்கானை, நிற்சாமம் போராட்டத்தில் சாதி அமைப்புக்கு வக்காலத்து வாங்குவதில் முன்னின்று செயற்பட்ட (தமிழரசுக் கட்சி அபிமானியான) ஒரு உதவி பொலீஸ் அதிகாரியின் செயற்பாடு, இதற்கு ஒரு தலை சிறந்த உதாரணமாகும்.



தன்னுடைய உரிமையைத் தட்டிக் கேட்கச் சென்றவனை பிடித்து வந்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்து 'சிறுநீர் பருக்கிய' இந்த உதவிப் பொலீஸ் அதிகாரியின் நடத்தை, காவல் துறை எவ்வாறு சாதியக் கனவான்களின் பக்கம் நின்று செயற்பட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆயுதம் தரித்த அடக்குமுறையாளர்களையும், அவர்களுக்குப் பின்நிற்கும் ஆயுதபாணிகளான பொலீஸ் படையையும் எதிர்கொள்வதற்கு கொள்கை உறுதியும், மனோ பலமும், ஆயுத பலமும் தேவை என்று தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் முடிவெடுத்ததில் தவறில்லை.

**- நக்கீரன்**

படிப்பகம்